Judicial Form No. 53
(Sec Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, KRISHNAGIRI.

Calendar .. ..
Miscellaneous .. ..
Preliminary Register .. ..
Sessions .. .. } CC. No. 192 of 2016

PW - 1

Time 12.20 PM -12.59 PM

Name : திருமதி. சித்திரா
Father's Name :
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

(Accused absent. Petition U/s.317 Crpc filed and allowed)

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act X of 1969 (Central Act 44 of 1969 on the day 6th day of March 2025.

**( மனுவின் பேரில் (Crl.M.P No.7427/2024) சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது )**

1. இந்த புகாருக்கு முன்பாக 2015ம் வருடம் செப்டம்பர் மாதம் என் கணவரான எதிரியின் மீது தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் ஜீவனசம் கேட்டு வழக்கு போட்டு இருந்தேன் என்றால் சரிதான். ஜீவனசம் வழக்கு போடுவதற்கு ஒரு வருடத்திற்கு முன்பே என் கணவரை பிரிந்து வந்துவிட்டேன் என்றால் சரிதான். ஜீவனசம் வழக்கிற்கு முன்போ அல்லது அதற்கு பின்போ இந்த வழக்கு போடும் வரை எதிரி வன்முறையில் ஈடுப்பட்டதாக நான் எந்த வழக்கும் போடவில்லை என்றால் சரியல்ல.

2. ஜீவனசம் வழக்கு போட்ட பிறகு நீதிமன்றத்திற்கு குழந்தைகளை கூப்பிட்டு வரும் போதும் நான் குடியிருந்த இந்திராநகர் வீட்டிற்கும்

குழந்தைகளை பார்க்க எதிரி சீனிவாசன் வருவார் என்றால் சரிதான், இரண்டு முறை தான் வந்தார். அதிகமாக வந்தது இல்லை. ஜீவனசம் வழக்கு நான்கு வருடங்களாக நடந்தது என்றாலும் எப்போது எல்லாம் நீதிமன்றத்தில் குழந்தைகளை அழைத்து வர உத்தரவு போடப்பட்டதோ அப்போது எல்லாம் எதிரி நீதிமன்றத்தில் வைத்து தான் குழந்தைகளை பார்த்தார் என்றாலும் 2 முறை தான் பார்த்ததாக பொய் சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.

3. நான் வழக்கு போடும் போது கார்மென்ட்சில் வேலை செய்வதாக சொல்லியுள்ளேன். இந்த வழக்கு கொடுத்த என் பாட்டி நான் சோலார் ஆக்ரி ஆபிசில் வேலை செய்ததாக தான் புகாரிலும், வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளார் என்றால் நான் இரண்டு இடங்களிலும் வேலை செய்ததாக என்னுடைய வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன். கார்மென்ட்சிஸ் எங்கு உள்ளது என்றால் டென்சியில் உள்ளது. அங்கு ஒரே நாள் தான் வேலைக்கு சென்றேன். அதன் பிறகு நான் வேலைக்கு சென்ற சோலார் ஆக்ரி ஆபிசிற்கும் இந்திரா நகரில் உள்ள என் பாட்டி வீட்டிற்கும் தோராயமாக 5 கி.மீ தூரம் இருக்கும் என்றால் எவ்வளவு கி.மீ என்று தெரியாது. RTO அலுவலகத்திடம் தான் உள்ளது.

4. நான் வேலை செய்துவிட்டு வரும் போது இடைப்பட்ட நேரத்தில் என் கணவர் எப்போதாவது என்னிடம் பேசியுள்ளாரா என்றால் இல்லை. ஆனால் பின் தொடர்ந்து மட்டும் வருவார். நான் முதல் விசாரணையில் எதிரி வந்ததாக சொல்லும் வீட்டில் என் தாய் மாமா, என் பாட்டி மற்றும் சேர்ந்துயிருக்கும் வீடு என்றால் சரிதான். நான் எதிரிக்கு எதிராக பொய்யாக வாக்குமூலம் கொடுத்துள்ளேன் என்றாலும் நான் ஜீவனசம் வழக்கு போட்ட பிறகு இடைப்பட்ட 10 மாத காலத்தில் நான் வேலைக்கு சென்று வரும் போது எங்கு வேண்டுமானாலும் எதிரி பிரச்சினை செய்திருக்கலாம் என்றாலும் எல்லோரும் கூட்டு குடும்பமாக குடியிருக்கும் வீட்டில் குழந்தைகள் முன்பாக வந்து எதிரி பிரச்சினை செய்ய தேவையில்லை என்றால் சரியல்ல. என் மாமா வெளியூரில் உள்ளார். அந்த வீட்டில் நான், என் பாட்டி, என் அம்மா மற்றும் பிள்ளைகள் தான் இருக்கிறோம். என் அப்பா வெளியூரில் வேலை செய்து வந்தார்.

5. நான் மாற்று திறன் மாணவர்கள் பள்ளியில் வேலை செய்கிறேன். அது நிரந்தர பதவியா என்றால் இல்லை. நான் டிகிரி படித்துள்ளேன். ஜீவனசம் வழக்கின் தீர்ப்பின் தேதி சொல்ல முடியுமா என்றால் தெரியாது. இன்றுவரை ஜீவனசம் வரவில்லை. குடும்ப நல நீதிமன்றத்தில் இன்றுவரை வழக்கு நடந்து வருகிறது. அவர் நீதிமன்றத்திற்கு வருவதில்லை. நான் மட்டும் தான் சென்று வருகிறேன். குடும்ப நல நீதிமன்றத்தில் இந்த வழக்கு சம்மந்தமாக ஆவணங்களை இன்றுவரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு பொய் என்பதால் தான் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் MC.No.26/2015 வழக்கில் 24.04.2018ம் தேதியிட்ட தீர்ப்பில்

இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை குறித்து நான் சாட்சியம் அளித்ததாக இல்லை என்றால் சரியல்ல.

6. அந்த வழக்கின் தீர்ப்பை நான் பார்த்தேனா என்றால் இல்லை. நான் சம்பவம் நடந்ததாக சொல்லும் நாள், தேதி, நேரத்தில் எதிரி சீனிவாசன் என் வீட்டிற்கு வரவும் இல்லை, என் பாட்டியை அடிக்கவும் இல்லை என்றால் சரியல்ல. எதிரியின் மீது தப்பை ஜோடிப்பதற்காக பொய்யான புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. ஜீவனசம் ஏதற்கு கேட்கிறாய் என்று எதிரி இரும்பு கம்பியை வைத்து அடித்து என் பாட்டி ஒரு வாரம் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார். நான் வேலைக்கு சென்று வரும் போது ஆண் நண்பருடன் பேசுவேன் என்றாலும் அவர் என்னை வீட்டில் விடுவதால் தான் எதிரி என்னை பின் தொடர்ந்து வருவார் என்றாலும் அவர் என்னை பின் தொடர்ந்து வரக்கூடாது என்பதற்காக தான் என் குடும்பத்தாரை வைத்து இந்த வழக்கை போட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

7. எதிரி சீனிவாசன் என் மீது எந்த வழக்கும் இதுநாள் வரை போடவில்லை என்றால் சரிதான். என் மேல் தவறு இருப்பதால் தான் நான் இன்று வரை சேர்ந்து வாழ எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. எதிரி தங்கையுடன் செல்கிறார் என்பதால் தான் நான் வழக்கு போட்டேன். எதிரி திருமணத்திற்கு மீறிய உறவு வைத்திருந்தால் நான் அது குறித்து வழக்கு போட்டுயிருப்பேன் என்றால் சரியல்ல. நான் மகாராஜகடை காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளேன். எதிரி குழந்தைகளை பார்க்க வரக்கூடாது என்று பஞ்சாயத்து பேசியதை மீறியும் எதிரி குழந்தைகளை பார்க்க வருவேன் என்று சொன்னதால் அதை தடுப்பதற்காக தான் என் குடும்பத்தாரை வைத்து இந்த வழக்கை போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. என் பாட்டியை அடித்த அன்று தான் எதற்கு அடித்தாய் என்று கேட்டோம். பஞ்சாயத்து பேசவில்லை.

8. எதிரி அடித்தால் தான் என் பாட்டி வீட்டில் இருப்பதாக சொல்லுவது எல்லாம் பொய் என்றாலும் அவர் முதுமையின் காரணமாக தான் வீட்டில் உள்ளார் என்றாலும் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் நான் சொல்லுவது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் எதிரி நான் சொல்லுவது போல் எந்த தவறும் செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> இல்லை

SRIVASTAVA Digitally signed by SRIVASTAVA